தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 6, ஆங்கிரச—திருவள்ளுவர் ஆண்டு 2023.

1992 செப்டம்பர் 21, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற்பவர்க்கு,''

தீயிட்டுச் சுடச்சுட மாசு நீங்கி ஒளிவீசும் பொன்போல் தவ வலிமையால் உயர்ந்து நிற்போர், துன்பம் எனும் தீ வருத்த வருத்த தீமை நீங்கி ஒளிவீசுவர்.

(1) இரங்கற் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. ஜி. மூர்த்தி அவர்கள் 7—5—1992 ஆம் நாளன்றும், திரு. கே. ஜே. உய்யகொண்டான் அவர்கள் 11—5—1992 ஆம் நாளன்றும், திரு. க.வெ. வீரானபலம் அவர்கள் 6—6—1992 ஆம் நாளன்றும், திரு. பி. கே. லிங்க கவுடர் அவர்கள் 25—6—1992 ஆம் நாளன்றும், திரு. கே. என். சிவபெருமாள் அவர்கள் 1—7—1992 ஆம் நாளன்றும், திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் அவர்கள் 17—8—1992 ஆம் நாளன்றும் மற்றும் திருமதி கே. கமலாம்புஜம்மாள் அவர்கள் 19—8—1992 ஆம் நாளன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினராகிய திரு. ஜி. மூர்த்தி அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம், பேரணாம்பட்டுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. ஜே. உய்யகொண்டான் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை அன்றைய வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

[1992 செப்டம்பர் 21

திரு. க. வெ. வீரான்ம்பலம் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரையிலும் மதுரை மாவட்டம் மேலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றி யுள்ளார். மேலும் இவர் மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பி. கே. லிங்க கவுடர் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணி யாற்றியுள்ளார்.

திரு. கே. என். சிவபெருமாள் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை அன்றைய மதுரை மாவட்டம் வேடசந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேர்வைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு மிகச் சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்.

திருமதி கே. கமலாம்புஜம்மாள் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை அன்றைய செங்கற் பட்டு மாவட்டம் கும்மிடிபூண்டித் தொகுதியிலிருந்து தமிழ் நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து இப்பேரவை மிகுந்த துயருற்றுள்ளது. அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலேயும், என் சார்பிலேயும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து இரண்டு மணித் துளிகள் மவுனமாக நின்றனர்.)